**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.78/2017**

**வா.சா.1 – பழனிச்சாமி**

**நாள்.24.04.2023**

**19ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுத, படிக்க தெரியாது. சொத்தில் பாகபிரிவினை வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 19ம் பிரதிவாதி நந்தகுமாரை தெரியும். நந்தகுமார் எதிர் வழக்குரையில் என் சொல்லியுள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியாது. 19ம் பிரதிவாதி என்ன பதில் போட்டுள்ளார் என்ற விபரத்தை என் வக்கீல் மூலமாக கேட்டுத் தெரிந்துகொள்ளவில்லை. 19ம் பிரதிவாதி தாக்கல் செய்து எதிர் வழக்குரைக்கு என் தரப்பில் பதில் எதுவும் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய முதல் விசாரணையில் 19ம் பிரதிவாதி தெரிவித்த விபரத்துக்கு மறுத்து முதல் விசாரணை கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்துகளை ஆவணங்களின் அடிப்படையில் தான் தெரியும். நேரடியாக எனக்கு தெரியாது. தாவா 1முதல் 3 லக்க சொத்துகளை வாசாஆ.3 முதல் 5 லக்க ஆவணங்களின்படி என் பாட்டனார் பொன்னம்பலம் சொத்தை கிரையம் பெற்றார் என்று சொன்னால் சரிதான். என் பாட்டனார் 26.08.1901 அன்று பிரதிவாதிகளின் பாட்டனார் பூசாரி (எ) சங்கன் கிரையம் செய்து கொடுத்தார்களா என்றால் சரிதான். தாவா 4வது லக்க சொத்தை பூசாரி (எ) சங்கன் மகன் காஞ்சானும், பொன்னம்பலமும் வாசாஆ.7ன்படி சொத்தை கிரையம் பெற்றார்கள் என்று சொன்னால் சரிதான். வழக்கறிஞர் திருமலைச்சாமியை வைத்து திண்டுக்கல் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.301/2002 என்ற வழக்கை நாங்கள் பிரதிவாதியின் முன்பாத்தியஸ்தர்களுக்கு எதிராக தாவா சொத்து சம்மந்தமாக விளம்புகை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. ஆனால் அந்த வழக்கு நாங்கள் மேற்கொண்டு நடத்தாத காரணத்தினால் தள்ளுபடி ஆனது என்று சொன்னால் சரிதான். பிரதிவாதிகள் திண்டுக்கல் மாவட்ட நீதிமன்றத்தில் சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் வேண்டி அசல் வழக்கு எண்.220/2004 என்ற வழக்கை தாக்கல் செய்தார்கள் என்று சொன்னால் சரிதான். அந்த வழக்கில் பிரதிவாதிகளுக்கு அனுசர்னையாக தீர்ப்பு வழங்கப்பட்டது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா 1 முதல் 3 லக்க சொத்துகளை 1901ல் பொன்னம்பலம் கிரையம் செய்து கொடுத்த பிறகு அவர் அந்த சொத்தை அனுபவம் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

1901 க்கு பிறகு பொன்னம்பலம் தாவா 1 முதல் 3 லக்க சொத்தை அனுபவம் செய்து வந்த விபரம் எனக்கு நேரடியாக தெரியாது.

**குறுக்கு விசாரணை வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P SARAVANAN

Digitally signed by P SARAVANAN
Date: 2023.04.24 18:10:56 +0530

Additional District Judge,

Dindigul.